**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No. 24 /2024**

**வாக்குமூலம்: வா.சா.1 – ராமகிருஷ்ணன்**
**23.03.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. வழக்குச் சொத்துக்களும், 1 ஆம் பிரதிவாதி பாத்தியப்பட்ட சொத்துக்களும் ஆதியில் பெரியணகவுண்டர் என்பவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். கடந்த 27.09.1968 ஆம் தேதி ஏற்பட்ட பாகப்பிரிவினையில் பெரியண கவுண்டருடைய மக்கள் பழனிச்சாமி, கருப்பணகவுண்டர் ஆகியவர்களுக்கு ஏ பாகமாகவும், அவருடைய மகன்கள் குப்பணகவுண்டர் மற்றும் சுப்பிரமணி ஆகியோர்களுக்கு பி பாகமாக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது பாட்டனாரான கருப்பண கவுண்டருக்கும், பழனிச்சாமி அவர்களுக்கும் ஏ பாகமாக கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் வாய்மொழியாகத்தான் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. வாய்மொழி பாகப்பிரிவினை படி அனுபவித்து வந்த சொத்துக்களை அவரவர்கள் பெயரில் UDR பட்டா பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். கடந்த 27.05.1996 ஆம் தேதி பழனிச்சாமி கவுண்டரின் மக்கள் கருப்பண கவுண்டரும் 1 ஆம் பிரதிவாதி நடராஜன் அவர்களும் பதிவு செய்த பாகப்பிரிவினைபத்திரம் படி சொத்துக்களை பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் தாவா சொத்து வீட்டைப் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கடந்த 02.12.2009 ஆம் தேதி நானும், எனது சகோதரரும் சேர்ந்து என்னுடைய தகப்பனார் மற்றும் எங்களது சகோதரி ராஜேஸ்வரி ஆகியோரிடமிருந்து பாகப்பாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் 9 வது அயிட்ட சொத்தான இந்த தாவா சொத்தை எழுதி வாங்கியுள்ளோம் என்றால் சரிதான்.

3. அந்த பத்திரத்திற்கு முன்பாக உள்ள ஆவணங்களில் தாவா சொத்து பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றாலும், மேற்படி விடுதலை ஆவணத்தில் தான் தாவா சொத்தை நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்து மொத்தம் 1850 சதுரடி என்றால் சரிதான். தாவா சொத்துக்கு UDR காலத்திலிருந்து தற்போது வரை 1 ஆம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் தாவா இடத்திற்கு பட்டா கேட்டு விண்ணப்பித்த போது UDR ல் 1 ஆம் பிரதிவாதி பெயரில் பட்டா இருந்ததால் அதற்கு ஆட்சேபனை செய்ததால் தனிப்பட்டா வழங்கவில்லை அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

கடந்த 2022 ஆம் ஆண்டு தான் பட்டா கேட்டு மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அதற்கு முன்பும் மனு தாக்கல் செய்துள்ளோம்.

4. வருடம் ஞாபகமில்லை கடைசியாக தாக்கல் செய்த மனு 2022 ஆம் ஆண்டு ஆகும். தாவா சொத்திற்கு எப்போது மின் இணைப்பு வாங்கினோம் என்றால் எனது தந்தை காலத்திலேயே வாங்கப்பட்டது. எப்போது வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்குத் தெரியாது. தாவா சொத்திற்கு எப்போது வீட்டு வரி கணக்கு பெறப்பட்டது என்றால் வருடம் சரியாக தெரியவில்லை. கடந்த 27.05.1996 ஆம் தேதிய பாகப் பிரிவினை பத்திரத்தில் 9 செண்ட் விடுபட்டுள்ளது என்பதால் விடுபட்ட சொத்தை எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதில் பகுதி சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் மேற்படி 9 செண்ட் இடத்தில் வீடு உள்ளதாகவும், அதில் எங்களுக்கும் 1 ஆம் பிரதிவாதிக்கும் பாத்தியம் உள்ளது என்றும் எந்த ஆவணத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. எனது அனுபவத்திற்கும், உரிமைக்கும் இரண்டிற்கும் ஆதாரமாக மின் இணைப்பு மற்றும் வீட்டு வரி கணக்கு ஆகியவற்றை வைத்து மட்டும் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பாக பாத்திய விடுதலை ஆவணம் முலம் உரிமை கோருகிறேன். பாக பாத்திய விடுதலை ஆவணம் இந்த வழக்கு சொத்தை எங்களுக்கு உரிமை உள்ள சொத்தாக காட்டுவதற்காக எங்களால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனது சகோதரிக்கும், தகப்பனாருக்கும் உரிமை உள்ள சொத்தை காட்டிலும் அதிகமாக பாக பாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்தியதால் மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் UDR பட்டா மற்றும் உரிமை ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள விஸ்தீரணங்களுக்கு அதிகமாக பட்டா கேட்டு மனு தாக்கல் செய்ததால் தான் 2 ஆம் பிரதிவாதி எனது மனுவை தள்ளுபடி செய்துள்ளார் என்றால் சரியல்ல.

6. அதனால் 2, 3 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. வில்வாதம்பட்டி கிராமத்தில் எனக்கும் 1 ஆம் பிரதிவாதிக்கும் கூட்டாக வீடு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் எங்களுக்கு ஒதுக்குப்பட்ட வீட்டை நாங்கள் கிரையம் செய்து கொடுத்து விட்டோம் என்றால் சரிதான். மேற்படி வீட்டை நாங்கள் விற்று விட்டதால் குடியிருக்க வீடு இல்லாததால் 1 ஆம் பிரதிவாதியினுடைய தோட்டத்து சாளையில் அனுமதி பெற்று எனது தகப்பனார் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி குடியிருந்த வீட்டிற்கு 1 ஆம்

பிரதிவாதிக்கு தெரியாமல் மின் இணைப்பும், வீட்டு வரியும் பெற்றுக் கொண்டு தற்போது உரிமை கொண்டாடுகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் 1ஆம் பிரதிவாதிக்கு உரிமை உள்ள சொத்தில் மின் இணைப்பும், வீட்டு வரியும் பெறுவதற்கு 1ஆம் பிரதிவாதியிடம் எழுத்துப் பூர்வமாக அனுமதி பெற்றுள்ளோமா என்றால் இல்லை, கடந்த 1968 ஆம் தேதிய பாகப் பிரிவினை படி தான் மின் இணைப்பும், வீட்டு வரி கணக்கும் பெற்றோம். நான் சொல்வது போல் கடந்த 1968 ஆம் தேதிய பாகப் பிரிவினைப் படி அனுபவித்து வந்திருந்தால் கடந்த 1984 ஆம் ஆண்டில் UDR பட்டா பெற்றிருந்திருப்போம் என்றால் UDR பட்டா வாங்குவதற்கு முன்பிருந்தே அனுபவித்து வந்தோம். UDR பட்டாவில் குளறுபடி உள்ளது. 1968 பாக விஸ்தி மற்றும் வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் தாவா சொத்தை 1ஆம் பிரதிவாதி பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் அதில் எவ்வித குளறுபடி இல்லையென்றாலும் சரியல்ல. அதனால் பட்டாவை ரத்து செய்யக் கோரி பரிகாரமும், வழக்குச் சொத்தைப் பொறுத்து உரிமை கோரி விளம்புகை கோரும் பரிகாரமும் எனக்குக் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் கடந்த 25.11.2023 ஆம் தேதி வழக்குச் சொத்தில் 1 ஆம் பிரதிவாதி அத்துமீறி நுழைந்து எவ்வித இடைஞ்சலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு கால தாமதமாக தாக்கல் செய்துள்ளதாலும், வழக்கு மூலத்தை உற்பத்தி செய்து விட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் கோரியுள்ளது போல் 3 மற்றும் 4 வது பரிகாரம் பட்டா பாஸ்புக் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. வழக்கில் நாங்கள் கோரிய பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/- சு.அபூர்வா,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
பழனி.